MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# முல்லைநில மக்களின் அகவாழ்வியல்

**ஆய்வாளர்**

**பா. சுபா ஸ்ரீ**

முதுகலை தமிழ் இலக்கியம் ,

இரண்டாம் ஆண்டு ,

சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி ,

ஒட்டன்சத்திரம் .

**நெறியாளர்**

**அ. பாவை**

எம்.எ.,எம்.பில்.,எல் ஐ எஸ் சி (பி. எச். டி)

துறைத்தலைவர் ,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,

ஒட்டன்சத்திரம் .

JANUARY - FEBRUARY

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

# THE INNER LIFE OF THE PEOPLE OF MULLAILAND

**Researcher**

**P. Suba Sri**

M.A Tamil Literature,

Second Year,

Sakthi College of arts and

Science for Women,

Oddanchatram.

**Guide**

**A.Pavai**

M.A., M.Phil., MLISC (PHD)

Assistant Professor

Sakthi College of Arts and Science for Women,

Oddanchatram.

## ABSTRACT

The inner life of the people of mullai nila is shaped by the basic feelings of peace, patience, and trust. Waiting is considered the proper internal discipline of this land. When the leader leaves for material gain or duty. The leader waits for him trust, which is the central idea of mullais internal life. The lives of the mullai people were closely connected to the natural environment. Herding cattle, household chores, and maintaining relationships played an important role in their daily lives. The love, patience and sense of duty shown by the chief and the

MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026    E-ISSN 3049-3676 (Online)

chieftain for each other are highly praised in the local literature. Furthermore, the lifestyle of the mullai people is one that upholds social morality. Motherhood, family responsibility, trust, and unity are clearly seen in the lives of the people of this land. Through this, mullai nilam reveals the high inner life traditions and humanistic ideas of the sangam period Tamil.

**முன்னுரை :**

முல்லை நிலத்தில் வாழ்ந்த, கால்நடைப் பொருளாதாரத்தை அடித்தளமாகக் கொண்ட மக்கள் ஆயர் எனப்பட்டனர். சங்ககாலத் தமிழர் வாழ்வியல் அகமும் புறமும் என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில் அக இலக்கியங்கள் மனித மன உணர்வுகள், காதல், காத்திருப்பு, பிரிவு, இணைவு போன்ற உள் வாழ்க்கை நிலைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வகையில் ஐந்திணைகளில் ஒன்றாகிய முல்லை நிலம் அமைதியான, பொறுமை நிறைந்த குடும்ப வாழ்வை பிரதிபலிக்கிறது. முல்லை நிலம் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், செடிகள், கொடிகள் சூழ்ந்த இயற்கை வளம் நிறைந்த பகுதியாக விளங்கியது.

**ஆயர் :**

ஆயர் என்பவர்கள் முல்லைநிலத்தில் வாழும் கால்நடை வளர்ப்பினர்கள் ஆவார். பழந்தமிழகத்தில் வாழ்ந்த தொன்மையான குடியினராக ஆயர் கருதப்பட்டனர். மு . அருணாச்சலம் பிள்ளை ஆயர்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்னும் இப்பெயர் ஆநிரை மேய்த்தற்றொழிலால் வந்த பெயராகும் என்கிறார். சதுரகராதியில் ஆயம் என்ற சொல்லுக்கு ஆதாயம் , சுங்கம், சூதாடுங்கருவி, தாய், தோழி, மகளிர் கூட்டம், நீளம் ,ஞானி, மல்லரி என பொருள் தருகின்றது .

ஆயம் எனப்படும் பசுக்கூட்டங்களை மேய்த்தவர் ஆயர் என்கின்றார் சி. ஈ .இராமசந்திரன் . ஆவினை மேய்ப்பவர் ஆயர் எனப்பட்டனர் என்கின்றார் கா . வெள்ளைவாரணனார். பெருஞ்செல்வமாக அநிரைகள் கருதப்பட்டன . மன்னராட்சியில் போரின் தொடக்கமாக ஆநிரை கவர்தல் நடைபெற்றது. ஆயர்களின் வாழ்நிலை என்பது பெருஞ்செல்வமான அநிரைகளைக் காப்பதும் மேய்ப்பதும் அவற்றிலிருந்து பெறப்படும் பால்பொருட்களை விற்று வாழ்வது ஆகும் . இதனை ,

**“ புனத்துளான் எந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ ?**
**இனத்துளான் என்னைக்குக் கலதோடு செல்வதோ ?**
**திணைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ? ’’**

**( கலி.108:31-33)**

என்ற அடிகள் விளக்கும் .

**ஆயர் பிரிவுகள் :**

முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் ‘ஆயர்’ என்ற

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பொதுவான குலப்பெயரைக் கொண்டிருந்தாலும் அவர்கள் வளர்த்த கால்நடைகளின் அடிப்படையில் ‘ **மாட்டினத்து ஆயர் , ஆட்டினத்து ஆயர், எருதினத்து ஆயர்** ’ என பிரிக்கப்பட்டனர் . மாட்டினத்து ஆயர்கள் மாடு மேய்ப்பவர்கள் என்றும் , ஆட்டினத்து ஆயர்கள் ஆடு மேய்ப்பவர்கள் என்று வகைப்படுத்தினர். இதனை ,

**“ எல்லா! இக்தொன்று கூறு குறும்புஇவர்**
**புல்லினத் தார்க்கும் குடஞ்சுட் டவர்க்கும்எம்**
**கொல்லேறு கோடல் குறையெனக் கோவினத்தார்**
**பல்வேறு பெய்தார் தொஉஉ ”**

**( கலி.107:1-4)**

என்ற அடிகள் உணர்த்தும் . மாட்டினத்து ஆயர்களில் பசுவினத்து ஆயர் , எருதினத்து ஆயர் என இருபிரிவுகளாக உள்ளன .

**பசுவினத்து ஆயர் :**

பசுவினத்து ஆயர்கள் பசுக்களை வளர்த்து அவற்றின் பால், மோர், வெண்ணெய்

முதலியவற்றை உணவாகவும், வாணிபப் பொருளாகவும் பயன்படுத்தினர்.

இதனை,

**“தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய**
**நல்லிணத்து ஆயர் ஒருங்குதொக்கு எல்லாரும் ”**
**( கலி.104:5-6)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“இகுளை! இஃது ஒன்று கண்டை! இஃது ஒத்தன் !**
**கோட்டினத்து ஆயர் மகனன்றே ?**
**( கலி.103:32-33)**

என்ற அடிகள் உணர்த்தும் .பசுவினத்து ஆயர் **நல்லினத்து ஆயர்** எனவும் , **கோட்டினத்து ஆயர்** எனவும் அழைக்கபட்டனர் . ஆநிரைகளை மேய்த்தலும் , பால் கறத்தலும் ஆயர்களின் தலையாயப் பணியாகும் . கறந்த பாலினைத் தயிராகவும் , மோராகவும் பக்குவப்படுத்தி அருகில் உள்ள இடங்களுக்குச் சென்று விற்று வருதல் ஆயர்குலப் பெண்களான ஆய்ச்சியரின் விருப்பமான தொழிலாக மேற்கொள்ளப்பட்டது .

**ஆட்டினத்து ஆயர் :**

ஆட்டினத்து ஆயர்கள் ஆடு மேய்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களை **புல்லினத்து ஆயர்** எனவும் அழைக்கப்பட்டனர். இதனை,

**“ தளர்இயால் ! என்னறிதல் வேண்டின் பகையஞ்சாப்**
**புல்லினத்து ஆயர் மகனேன் மற்றுயான் ”**
**(கலி.113:6-7)**

என்ற அடிகள் உணர்த்தும் . ஆட்டினத்து ஆயர்கள் இடையர் என அழைக்கப்படுகின்றன . ஆடுகளைப் பராமரித்து வளர்ப்பவர்கள் இடையர் ஆவார். சதுரகராதியில் ஆயர் என்பதற்கு இடையர் எனப் பொருளாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**எருதினத்து ஆயர் :**

எருதினத்து ஆயர்கள் உழவுக்குப் பயன்படும் எருதுகளை அதிகமாக வைத்திருந்தனர். எருதினத்து ஆயர்களை கோவினத்து ஆயர் எனவும் அழைக்கப்பட்டனர். இதனை,

"**கொல்லேரு கோடல் குறையெனக் கோவினத்தார்**
**பல்லேறு பெய்தார் தொழூஉ "**

**(கலி. 107:3-4)**

என்ற அடிகள் உணர்த்தும். எருதினத்து ஆயர்கள் எருதுகளுடன் பசுக்களையும் வளரத்து அதன் மூலம் கிடைக்கும் பால் முதலிய பொருள்களை விற்று தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர்.

**ஆயர்களின் வாழ்வியலில் களவு** :

ஆயர்களின் வாழ்வியலில் **'முல்லை சான்ற கற்பு,** என கற்புநெறி சார்ந்த இல்வாழ்க்கையை அடையாளப்படுத்தப்படுகின்றது. முல்லைக்கலிப் பாடலில் கற்பிற்குக் காரணமாய் களவும் இம்மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்புகின்றது.

**ஆயர்களின் களவு ஒழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி :**

களவுப் புணர்ச்சியின் முதல்நிலை இயற்கைப் புணர்ச்சி ஆகும். அன்புடையார் இருவர் முற்பிறப்பின் நல்வினையால்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

எதிர்பாராது ஓரிடத்தில் சந்திக்கும் போது நிகழும் நெஞ்சக்கலப்பே இயற்கைப் புணர்ச்சி ஆகும். தலைவியின் முயற்சியாலும், தெய்வதாலும் நிகழும் என்பதை நம்பியகப்பொருள் விளக்குகின்றது.

இதனை,

**"தெய்வந் தன்னில் எய்தவும் ; கிழத்தியின்**

**எய்தவும்; படூஉம் இயற்கைப் புணர்ச்சி "**

என்ற சூத்திரம் உணர்த்தும் . ஆயர்குலப் பெண்கள் மோர் விற்பதற்காக அருகில் உள்ள இடங்களுக்குச் செல்லும் போது தலைவியின் அழகைக் கண்டு தலைவன் காதலுறுவான். தலைவியும் தலைவன் மீது கொண்ட அன்பால் அவ்விடத்தை விட்டு அகல இயலாது நிற்பாள். தலைவனின் அன்பினை தலைவி ஏற்றுக் கொண்டதை அறிந்த தலைவன் புணர்ச்சிக்கு விழைவான். இந்நிலையில் தலைவி தாகத்திற்க்கு சிறிது மோர் அளித்தால் வெண்ணெய் வேண்டி நிற்பது போல் காமத்திற்க்கு உடனே மருந்தளிக்க இயலாது எனக் கடிந்துரைப்பாள். முதல் கன்றை ஈன்ற பசு அக்கன்றை விட்டு அகழாது மேய்ச்சலுக்கும் செல்லாது நிற்பதைப் போல் தலைவியின் அழகில் தலைவன் மனம் அலைபாயும். தலைவி சுற்றத்தாரின் பார்வைக்குப் பயந்து மறுநாள் சந்திப்பதற்க்கு இடம்கூறி நகர்வது இயற்கைப் புணர்ச்சியாகும் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**ஆயர்களின் களவு ஒழுக்கத்தில் இடந்தலைப்பாடு :**

இடந்தலைபாடு என்பது இயற்கைப் புணர்ச்சியில் இணைந்த தலைவன் தலைவி மீண்டும் சந்தித்து மகிழ இடம் குறிப்பதாகும். களவு காதலில் தலைமக்கள் மறைந்து கூடும் குறியிடங்களை பகற்குறி , இரவுக்குறி எனப் பகுத்தனர் .

இதனை தொல்காப்பியர் ,

“ **குறியெனப் படுவது இரவினும் பகலினும்**
**அறியக் கிளந்த ஆற்றதென்ப ”**

**( தொல். பொருள். களவு . 40)**

என்ற நூற்பாவால் விளக்குகின்றார் . ஆயர்களின் வாழ்விலும் பகற்பொழுதை விட இரவுப்பொழுதில் சந்திப்பது கடினமானதொன்றாகவே கருதப்பட்டது . இரவுப்பொழுதில் தலைவியின் வீட்டிற்க்கு அருகிலும், வீட்டின் கொல்லைப்புறத்தில் உள்ள மரங்களின் மறைவிலும் தலைமக்களின் சந்திப்பு நிகழ்ந்தது .

இரவுக்குறிக்கு ஆயர்குல மக்களின் நடமாட்டம் இடையூறாய் இருந்தது . ஆயர்குலப் பெண்கள் பாண்டியனை வாழ்த்தியும் மலர்கள் நிறைந்த மன்றங்களில் குரவைக்கூத்தினை ஆடியும் மகிழ்வர். அப்பெண்களின் கண்களில் படாமல் ஆம்பல் பண்ணை இசைத்துக் குறி செய்து ஆய்ச்சியரைச் சந்திக்க ஆயர் சென்றனர் .

**கற்பு ஒழுக்கம் :**

தொல்காப்பியம் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணம்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

வகுத்தது . கற்பு என்பதற்கு பிறர் அறியாது மறைந்து இன்பம் காணும் தலைமக்கள் திருமணத்தின் வழியாக உலகறிய கணவன் மனைவி எனும் உறவு நிலையால் இல்வாழ்க்கையில் இணைவது என வரையறுக்கின்றது. கற்பு ஒழுக்கமானது அந்தந்த நிலத்து உரிப்பொருளுடன் தொடர்புடையது. களவு வெளிப்பட்டும், களவு வெளிப்படாது உறவினாலும் இணையும் இல்லறத்தினரது இருத்தல், மகிழ்தல், ஊடல், இரங்கல், பிரிதல் முதலியவற்றோடு கூடி வருவதையே கற்பு என்கிறார் தொல்காப்பியர் .

இதனை ,

**" மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுத லாகிய வியனெறி திரியாது "**

**( தொல். பொருள் . செய்யு. 179)**

என்ற நூற்பா விளக்கும் . கற்பு என்பது அன்பாலும் , அறிவாலும் , அழகாலும் , பண்பாலும் ஒத்தநிலை கொண்ட அவனும் அவளும் களவொழுக்கத்தில் காதல் வளர்த்து தம் விருப்பம் போல் மணம் செய்து கொள்வதும் , பின்னர் இருவரும் இணைந்து இல்லறம் நடத்துதலும் ஆம் என்கின்றார் புலவர் செந்துறை முத்து .

**ஆயர்குலத் திருமணம் :**

முல்லைநிலத்து மக்களாகிய ஆயர்களின் திருமணம் களவின் வழிவந்த கற்பாயினும் , களவு வெளிப்படாத கற்பு எனினும் ஏறுதழுவல் எனும் வீரவிளையாட்டை அடிப்படையாய்க் கொண்டு அமைந்துள்ளது .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

களவின் வழிவந்த இல்லறத்தார் வாழ்க்கை இனிமை மிக்கது என்கின்றார் வ. சுப. மாணிக்கம். ஆயார்குலத்தில் பெண் மக்கள் பிறந்த வீடுகளில் ஆணேற்றுக்கன்றுகளை வளர்க்கத் தொடங்கினர். பெண்களும் வளர்ந்தனர், ஏறுகளும் வளர்ந்தன, ஆயர்குலப் பெண்ணை மணக்க விரும்பும் ஆண் அப்பெண்ணுடன் வளர்க்கப்பட்ட ஏற்றினை அடக்கிவெல்ல வேண்டும் என்பது பறை அறைந்து அறிவிக்கப்பட்டது. குறித்தநாளில் ஏறுதழுவலில் வெற்றிபெற்ற ஆண்மகனுக்கு ஆயர்கள் தங்களின் பெண்களை மணமுடித்தனர் .

திருமணம் என்பது ஒரு சடங்கு நிகழ்வின் மூலம் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக அங்கீகரிக்கப்படும் என்று வெ.மன்னார் கூறுகிறார் .இக்குலப் பெண்களும் வீரமிக்க ஆண்களையே கணவனாகக் கொள்வதில் மகிழ்ச்சியடைந்தனர் **.**

இதனை ,

**“ கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள் ”**

**( கலி. 103:63-64)**

என்ற அடிகள் விளக்கும் . காளையின் கொம்புகளுக்கு அஞ்சும் ஆண்மகனை இப்பிறவி மட்டுமன்றி மறுபிறவியிலும் கணவனாகக் கொள்ள விரும்புவதில்லை என்பதிலிருந்து ஆயர்க்குலப் பெண்களின் வீரவுணர்வு வெளிப்படுத்துகின்றது . தாம் விரும்பிய ஆடவனாகவே இருப்பினும் வீரமற்றவனாக இருப்பின் தம் காதலையும் நிராகரிக்கும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

வல்லமை கொண்டு விளங்கியதையும் அறியமுடிகிறது . ஆயர்களின் திருமணமானது 'ஏறுதழுவல்' எனும் வீரம் சார்ந்த புறக்கூறினைத் தன்னுட்கொண்டதாய் அமைகின்றது .

**ஆயர்களின் வாழ்வியலில் கற்புப்பிரிவு** :

முல்லை நிலத்துத் தலைவன் வினைமேற்கொண்டு தலைவியைப் பிரிந்து செல்வது காவற்பிரிவில் அடங்கும் . முல்லைத்திணைப் பாடல்கள் தலைவன் வினைமேற்ச்சென்று மீளும் நிலையைக் குறிப்பிடுகின்றனர் . முல்லைப்பாட்டு , தலைவன் நாட்டினைக் காக்கும் பொருட்டு , பிறநாட்டினைக் கைப்பற்றும் பொருட்டும் போரில் காரணமாகத் தலைவியைப் பிரியும் பிரிவு நாடுகாவல் என்பதைச்சுட்டும்.

காவற்ப்பிரிவு இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது . அவை , 1. அறப்புறங்காவல் , 2. நாடுகாவல் என்பதாகும் . இதனை ,

**" அறப்புறங்காவல் ; நாடுகாவல் ; எனச்**

**சிறப்புறு காவல் திறம்இரு வகைத்தே "**

என்ற சூத்திரத்தை நம்பியகப்பொருள் விளக்குகின்றது .

**ஆயர்குலத் தலைவனின் கற்புநெறி :**

' கற்பு ' அடையாளமாகச் சுட்டப்பெறும் முல்லை நிலத்தில் தலைவிக்கு நிகராகத் தலைவனும் கற்புநெறி புரிந்து இல்லறத்தைச் சிறப்பித்தான் . தலைவன் போர்ப்பாசறையில் வெற்றிவாகைச் சூடுவதற்கு முன்னர் கார்காலம் தொடங்கியதால்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

போரினை எண்ணி கண் உறங்காது இருக்கும் வேளையில் தன் தலைவி இந்நேரம் எவ்வளவு துயரம் அடைவாள் என்று வருந்தினான். மழைக்காலத்து மாலைநேரத்து ஒலிகள் தலைவியை வருத்துவதை அவள் எங்ஙனம் தாங்குவாளோ ? என்ற கவலை கொண்டான் .

இதனை ,

" **அகல்இரு விசும்புஅகம் புதையப் பாஅய்ப்**
**பகல்உடன் கரந்த பல்கதிர் வானம்**
**இருங்களிற்று இனநிரை குளிர்ப்ப வீசிப்** "

**( அகம். 214: 1-15)**

என்ற அடிகள் விளக்கும் வினைமுடித்து மீண்டும்வரும் தலைவன்,தலைவியிடம் கொண்ட காதலால் தேரினை விரைந்து செலுத்துவான். தலைவன் தேர்ப்பாகனிடம், கார்காலம் வந்ததை உணர்ந்த தலைவி தன் வரவை எதிர்நோக்கி வாசலில் காத்திருப்பாள் . எனவே தலைவியைக் கண்டு கூடிமகிழும் இன்பமிகுதியால் தேரினை விரைந்து செலுத்துக என்றான். இவ்வாறு தேரினை விரைந்து செலுத்தும் தலைவனின் மனநிலையை சங்க இலக்கியப் பாடல்கள் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது . தலைவன் தேர்ப்பாகனிடம் என் தலைவி என் பிரிவுக்காக வெறுப்புறாமல் அமைதியாக இல்லத்தில் ஆற்றியிருப்பாள் . மாடமாளிகையின் படுக்கையில் தனித்திருக்கும் தலைவி இனிமை காணவும் , தமக்குப் பாசறையில் தங்கிய துன்பம் நீங்கவும் தேரினை விரைந்து செலுத்துக என்றான் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**உணவுப் பொருள்கள் நிறைந்த ஆயர்களின் இல்லங்கள் :**

காடும் காடு சார்ந்த பகுதியுமான முல்லைநிலம் காட்டாற்றின் நீர்வளத்தினாலும் , குறுஞ்சுனைகளாலும் , சூழப்பெற்று எளிய முறை விவசாயம் நடைபெற ஏற்ற இடமானது . நிலவளமும் நீர்வளமும் உணவு வளத்தை தீர்மானிக்கும் காரணிகளாகும் .இதனை ,

" **உணவெனப் படுவது நிலத்தொடு நீரே** "

**( புறம் .18:21)**

என்ற அடி உணர்த்தும். முல்லைநில, மக்களின் வாழ்வியலானது கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதால் ஆயர்கள் , பால் , தயிர் , மோர் , வெண்ணெய் , நெய் முதலியவற்றையும் மோர், நெய்யினை விற்று அதற்க்குப் பண்டமாற்றாகப் பெற்ற பிற நிலத்தவரின் நெல் வகைகளையும் விருந்தோம்பலில் உணவாக்கினர் .

ஆயர்கள் முல்லை நிலத்தின் நிறைந்த நீர் வளத்தைக் கொண்டு உழவுத் தொழிலை மேற்கொண்டனர். ஆகையால் உழவினால் தானியங்களைப் பயிர் செய்து நிறைவான உணவு உற்பத்தியை ஏற்படுத்தினர். ஆயர்களின் இல்லங்கள் கால்நடை வளர்ப்பினாலும் உழவுத் தொழிலாலும் விருந்தோம்புவதற்கு ஏற்ற உணவுப் பொருள்கள் நிறைந்து காணப்பட்டன. இம்மக்களின் வீடுகளின் முன்னே நெற்கூடுகள் யானைக் கூட்டம் போலவும் வரகினைத் திரிக்கும் திரிக்கைகள் யானையின் கால்களைப் போலவும் நின்றிருந்தன .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இதனை ,

**" பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்**
**களிற்றுத் தாள்புரையும் திரிமரப் பந்தர் "**

**( பெரும்பாண்.186-187)**

என்ற அடிகள் விளக்கும். ஆயர்களின் இல்லங்களில் பண்டமாற்றின் மூலம் பெற்ற பல நெல்வகைகள் பரவிக் காணப்பட்டன. அவர்களின் தொழுவங்களில் கிடாய்களோடு செம்மறியாடுகளும் , வெள்ளாடுகளும் நிறைந்து காணப்பட்டன .

**வறுமை நிலையிலும் விருந்தோம்பல் :**

விருந்தோம்பலை பெரிதும் விரும்பும் ஆயர்மகளிர் வறுமையான சூழலிலும் விருந்துபுறந்தருதலை மேற்க்கொண்டனர் . விருந்தினர் வந்த நேரத்தில் தன் இல்லத்தில் உணவாக்க எந்தவொரு உணவுப் பொருளும் இல்லாததை உணரும் கற்புடை பெண்டிர் விதைக்காகச் சேமித்து வைத்திருக்கும் சிறிதளவு திணை நெல்லையும் உரலில் குற்றி தினை அரிசியை உணவாக்கி விருந்தினருக்கு அளித்தனர் .

இதனை ,

**" வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின் "**

**( புறம். 333: 9-13)**

என்ற அடிகள் விளக்கும் . விதை நெல் என்பது ஆயர்களின் ஒரு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

வருடத்திற்கான உணவைத் தரவல்லது. இருப்பினும் தங்களின் பொருளாதாரத்தை கணக்கில் கொள்ளாது பசியோடு வந்தவரின் ஒரு வேலை உணவிற்காகச் சமைப்பது, இவர்களின் விருந்தோம்பும் சிறப்பினை புலப்படுத்துகின்றது. வறுமை நிலை வாட்டினாலும், வீட்டிற்க்கு எத்தனை பேர் வரினும், உணவு குறைவாக இருப்பினும் மணம் கோணாது நெடிய பந்தலிலே அமரச் செய்து உணவினை பரிமாறினர் .

**முடிவுரை :**

ஆயர்கள், மாட்டினத்து ஆயர், ஆட்டினத்து ஆயர், எருதினத்து ஆயர் என்று மூன்று வகையினராய் பிரிந்துள்ளது. ஆயரின் ஆற்றியிருத்தல் ஒழுக்கத்திற்குரிய அகவாழ்வியலானது களவு,கற்பு எனும் இரு ஒழுக்கங்களை உள்ளடக்கி இருப்பதாகும். களவு ஒழுக்கமானது கந்தர்வ மனத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. மேலும் தலைவனும் தலைவியும் உலகறிய திருமணம் செய்து கொண்டு வாழும் திருமண வாழ்க்கைக்கு கற்பு என்று பெயர். இக்கற்பு ஒழுக்கமானது களவின் வழி வந்த கற்பு, களவின் வழி வராத கற்பு எனும் இரு நிலைகளை கொண்டுள்ளது. ஆயர்களின் திருமணமானது ஏறுதழுவுதல் எனும் வீரவிளையாட்டை அடிப்படையாய்க் கொண்டு அமைகின்றது . நிலமும் நீரும் செறிந்து காணப்பட்ட முல்லை நிலத்தில் விளைந்த உணவுப் பொருள்களும் கால்நடைகளிடமிருந்து பெறப்பட்ட

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பால் , பால் சார்ந்த பொருள்களும் விருந்தாக்கப்பட்டதைப் பற்றிய செய்திகளை இவ்வாய்வின் அறிந்தோம் .

**துணைநூற்பட்டியல் :**

1. கலித்தொகை, நச்சினார்க்கினியார் உரை - கு.வெ .பாலசுப்ரமணியன் .
2. அகநானூறு , மூலமும் உரையும் , புலியூர்கேசிகன் உரை .
3. புறநானூறு, மூலமும் உரையும் , புலியூர்கேசிகன் உரை .
4. தொல்காப்பியம், அகத்திணையியல் , மு. அருணாச்சலம் பிள்ளை .
5. சதுரகராதி , வீரமாமுனிவர் .